*Journal of Social Review*
*Volume 5 (1)*
*June 2018*
*Department of*
*Social Sciences*

# 'மனித சுதந்திரம்' பற்றிய சாத்ரே மற்றும் ∴பூக்கோவின் கருத்துக்கள் – ஒரு பகுப்பாய்வு

இஸ்ஸதீன். எம்.எல்.,
பாத்திமா நப்லா. கே.எல்.

### ஆய்வுச் சுருக்கம்

*ஐரோப்பியத் தத்துவ மரபில் அதிகம் பேசப்பட்ட எண்ணக்கருவாக சுதந்திரம் காணப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் இருப்பியல் சிந்தனையாளரான ஜீன் பவுல் சாத்ரே மனித சுதந்திரம் பற்றி அதிகம் பேசியவராவார். அவர் சுதந்திரம் என்பதை மனிதப் பிரக்ஞையின் அடிப்படைப் பண்பாக கருதுகிறார். மனிதன் வரையறையற்றவன், அவன் சுதந்திரமானவன் என்பதன் மூலம் அவன் எதுவாக இருக்க வேண்டும் என்பதை அவனேதான் நிர்ணயித்துக் கொள்கிறான் என்கிறார். இதற்கு மாற்றமான ரீதியில் பின்நவீனத்துவச் சிந்தனையாளர் பூக்கோவின் கருத்துக்கள் அமைந்திருந்தன. பூக்கோவின்படி மனிதர்கள் சுதந்திரமானவர்கள் அல்ல. அவர்கள் அதிகாரத்தின் உரையாடலால் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், அதிகாரம் எப்போதும் அவர்களை ஒழுங்கு படுத்திக் கொண்டேயிருக்கிறது என்றார். இது, 'மனிதன் தன் சுதந்திரத்தை மறுத்து தான் ஏதோவொரு வகையில் கட்டுப்படுத்தப்படுவதாக நினைத்துக் கொண்டிருக்கிறான்' என்ற சாத்ரேயின் விளக்கத்தைப் பூச்சியமாக்கி இருக்கிறது. அதாவது தீர்மானிக்கப்பட்ட எல்லைக்குள்ளேயே மனித செயற்பாடுகள் அமைகின்றன அல்லது அதிகாரம் தனக்கான உரையாடலை நிகழ்த்துவதன் மூலம் மனிதனது தெரிவுகளையும் அதுவே தீர்மானிக்கிறது என்கிறார் பூக்கோ. இவ்வகையில் இவ்வாய்வானது ஒன்றிற்கொன்று முரணான இவ்விரு சிந்தனைகளின் ஒளியில் மனித சுதந்திரத்தின் சாத்தியப்பாடு குறித்து ஆராய்கிறது.*

## அறிமுகம்

மெய்யியல் சிந்தனை உலகில் அதிகம் அறியப்பட்ட சிந்தனை முறையாக இருப்பியல் வாதம் காணப்படுகின்றது. பிரான்ஸில் இதனை விளைவித்தவராக ஜீன் பவுல் சாத்ரேயினை (Jean – Paul Sartre : 1905 – 1980) குறிப்பிட முடியும். அறிவை முதன்மைப் படுத்திய அறிவொளிக்காலத்தை மறுத்த இருப்பியல் வாதச் சிந்தனை மனிதன், மனித இருப்பு, மனித நலன், மனித சுதந்திரம் போன்றவற்றை முக்கியத்துவப் படுத்தியது. மனித சுதந்திரம் பற்றி மற்றெல்லா இருப்பியல்வாதிகளை விடவும் அதிகம் பேசியவர் சாத்ரே ஆவார். இவர் மனிதன் என்பதை சுதந்திரத்தோடு சமப்படுத்தினார்.

அதுவரை மனிதன் என்பவனுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களைப் புறக்கணித்த சாத்ரே எந்த வரையறையும் மனிதனுக்கு பொருந்தாது. மனிதன் வரையறை அற்றவன். அவன் பொருளாதாரமோ, தெய்வமோ, பாலுணர்ச்சியோ, அறிவோ, உடலோ அல்ல. அவன்

எதுவுமல்ல. அவன் சுதந்திரமானவன் என்றார். மேலும் அவன் எதுவுமல்ல என்பதில்தான் அவனது சுதந்திரம் அடங்கி இருக்கின்றது. அவன் ஏதாவதொன்றாக இருக்கும்வரை அவன் அதனால் தீர்மானிக்கப்படுகின்றான். அவனது சுதந்திரம் அவனது வரையறையினால் கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால் மனிதன் என்பவன் இதுவரை கூறப்பட்ட வரையறைகளில் எதுவுமில்லை, அவன் சுதந்திரமானவன் எனும்போது எதுவாகவும் இருக்கும் சுதந்திரத்தை பெறுகின்றான் (முத்துமோகன், 2007 : 142).

இவ்வாறே மனிதன் தனது தேர்வுகளைக் கொண்டு எல்லாவற்றையும் தீர்மானிக் கின்றான். அவனிடம் முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்டுள்ள சாரம் எதுவுமில்லை. மனிதனுக்கு மனிதனே எல்லாமாக இருக்கிறான். அவனை எதுவும் கட்டுப்படுத்தவில்லை. அவனை எதுவும் நிர்ணயிக்கவில்லை என்பதன் மூலம் மனிதன் சுதந்திரமானவன் என்ற கொடியை சாத்ரே உயர்த்திப் பிடிக்கிறார்.

சமகாலத்தின் மிக முக்கிய சிந்தனையாளராக மதிக்கப்படும் மிஷல் பூக்கோவின் (Michel Foucault : 1926 – 1984) சிந்தனைகளும் கருத்துக்களும் அது வரையான உலக கண்ணோட்டங்களுக்கு ஒரு புதிய வடிவத்தை வழங்கியவையாகும். இவர் அதுவரை நிலைபெற்றிருந்த ஜீன் பவுல் சாத்ரேயின் சிந்தனைகளை நிர்மூலமாக்கியவர் ஆவார். மனிதர்களின் அனைத்துச் செயற்பாடுகளும் அதிகாரத்தின் அடிப்படையில்தான் இருக்கிறது என்ற பூக்கோவின் கருத்துக்கள் அதிகம் நடை முறையைப் புலப்படுத்துவதாக அமைந் திருக்கிறது.

சாத்ரே தனது கருத்தில் மனிதன் தனக்கானதைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திர முடையவன். அவனது செயற்பாடுகளுக்கு அவனே பொறுப்பேற்கிறான். அவன் தெரிவு செய்வதும் தெரிவு செய்யாமல் விடுவதும் அவனைப் பொறுத்தது. ஆனால் அவன் தன்னை

சூழ்நிலைக்குக் கட்டுப்பட்டவனாகவும், விதிக்கு உட்பட்டவனாகவும் எண்ணுகிறான் உண்மையில் அது அவ்வாறல்ல என்கிறார்.

ஆனால் அதே நடைமுறையை பூக்கோ விபரிக்கையில் மனிதர்களுடைய சிந்தனை, தெரிவுகள், விருப்பம், அடையாளம் என அனைத்துமே அதிகாரத்தின் உரையாடலால் தீர்மானிக்கப்படுகின்றன. அவனது தெரிவுகூட கட்டமைக்கப்பட்ட வரையறைக்குள் அமைந்ததேயன்றி சுதந்திரம் என்பது அவனுக்கு இல்லை. அவன் ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறான் எனில் ஏற்கனவே அவனுக்கு வழங்கப்பட்ட தெரிவுகளும், ஊட்டப்பட்ட சிந்தனையும் அதில் செல்வாக்குச் செலுத்துகின்றது எனக் கொள்ள முடியும். அது மட்டுமன்றி ஒவ்வொரு யுகமும் தனக்கான உரையாடலை உருவாக்கி வைத்ததோடு மட்டுமல்லாது அது சார்ந்து சிந்திக்கவும், செயலாற்றவுமான கருத்தியல் அதிகாரக்கரம் ஒன்றினால் மனிதனைச் செயற்படச் செய்து கொண்டிருக்கிறது.

எனவே இவ்வாய்வு இவ்விரு சிந்தனையாளர்களின் முரண்பாடான

இந் நோக்குகளில் நின்று 'மனித சுதந்திரம்' பற்றி ஆராய்கிறது.

### ஆய்வுப்பிரச்சினை

உண்மையில் மனிதன் எந்த நிபந்தனைகளும் அற்ற சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறானா?

### ஆய்வு நோக்கம்

மனித சுதந்திரம் தொடர்பாக சாத்ரே மற்றும் பூக்கோவின் சிந்தனைகளை புரிந்து கொள்வதன் மூலம் மனித சுதந்திரம் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெறல்.

### ஆய்வு முறையியல்

இவ்வாய்வுக்கான தரவுகள் இரண்டாம் நிலை மூலங்களான நூல்கள், இணையத்தளங்கள், ஆய்வேடுகள் மற்றும் சஞ்சிகைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளதுடன், இதற்காக பகுப்பு மற்றும் விளக்கவியல்முறை பயன் படுத்தப்பட்டுள்ளது.

### சாத்ரேயும் மனித சுதந்திரமும்

இருபதாம் நூற்றாண்டின் மெய்யியல் சிந்தனையாளர்களில் ஜீன் பவுல் சாத்ரே அறிவுப்புலத்தில் தனக்கான தனி எல்லையைத் தோற்றுவித்தவர் ஆவார். இருப்பியல் வாத மெய்யியலின் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் அவருடையது என்பர். மனித சுதந்திரம் பற்றிய இவரது கருத்தியல்கள் குறிப்பிடத்தக்க பேசு பொருளாகும். இவரது கருத்தின்படி, எல்லாவற்றையும் மறுப்பதும், தான் தெரிவு செய்ததை செயற்படுத்துவதுமே சுதந்திரமாக இருக்க முடியும். சாத்ரே உலகத்தை எதேர்ச்சையான ஒன்று என்கிறார். இந்த உலகத்தில் காணப்படுகின்ற எதற்கும், அது ஏன் வேறொன்றாக இருப்பதில்லை என்பதற்கான காரணங்கள் எதுவும் இல்லை. அது போலத்தான் மனிதனது இருப்பும். அதாவது அவனைக் கட்டுப்படுத்துவது என்று எதுவும் இல்லை. அப்படியானால் அவனை இயக்கும் சக்தி எதுவும் இல்லை.

உண்மையில் மனிதன் தனக்கான நோக்கங்களையும் இலட்சியங்களையும் உருவாக்குவதன் மூலம் அவன் வாழத்தகுதி கொண்ட உண்மையான மனிதனாகிறான்.

மனிதன் எவ்வாறு உலகை உருவாக்குகிறானோ, அதுபோல் தன்னையும் உருவாக்குகிறான். அதற்கான அத்தனை சுதந்திரமும் அவனுக்கு இருக்கின்றது. அவன் எதைச் செய்கிறானோ, அதனை அவனே தேர்ந்தெடுக்கிறான். அதனால் அவன் தேர்ந்தெடுக்க வேண்டியதை அவனே முடிவு செய்கின்றான். எனவே, தேர்ந்தெடுப்பவனாக இருக்கும் மனிதனை எதுவும் கட்டுப்படுத்துவதில்லை. விதி, வரலாறு, சூழ்நிலைகள், தத்துவம் என அனைத்தையும் கடந்துவிடக்கூடியவனாக அவன் இருக்கிறான். இவை எவற்றாலும் அவன் நிர்ணயிக்கப்படுவதில்லை.

ஆனால் மனிதன் இத்தகைய மேலோங்கிய பொறுப்புக்களைத் தட்டிக்கழித்து விட்டு வெளிச்சக்திகளால் கட்டுப்படுத்தப் படுபவனாகவும், கொள்கைகளுக்கு ஆட்பட்டவனாகவும் தன்னை வெளிப் படுத்துகிறான். தன்னைக் கட்டுப்படுத்தும் சக்திகளாக கடவுள், விதி, நெறிகள், விஞ்ஞானம், தத்துவம், வரலாறு என்பவற்றைக் கருதுகிறான். ஆனால் உண்மையில் மனிதன்தான் இவற்றைத் தேர்வு செய்கிறான் என்பதை அறிவதில்லை என்கிறார் சாத்ரே.

மேலும் சாத்ரே, மனிதனுக்கு முந்தியது எதுவுமில்லை, வெறுமையே அவனுக்கு முந்தியது, மனிதனே அவனது சொந்த அடிப்படை என்கிறார். அவனுக்கு வழிகாட்டக்கூடியது எதுவுமில்லை, கடவுள் இல்லை, எனவே அவனது தேர்வில், வாழ்க்கையில், பணியில், சிந்தனையில் அவன் முற்றான சுதந்திரமுள்ளவன். தனிமனித மதிப்பைப்போற்றும் சாத்ரே அவன் தனது அசலான வாழ்க்கைக்கான வழிகளை, தீர்வை தனக்குள்ளேயே காணவேண்டும் என்கிறார் (ராஜதுரை, 1983 : 225).

இவரது கருத்து முழுவதும் மனிதன் தனக்கானதை தானே மேற்கொள்ளும் சக்தி பெற்றவன் என்பதை ஏற்றுக்கொள்ளச் செய்வதாக அமைந்திருந்தது. மனிதன் என்பதிலிருந்து மனித சுதந்திரத்தை பிரிக்க முடியாது, மனிதனாக இருத்தல் என்பதே சுதந்திரமாக இருத்தல் என்பதைத்தான் குறிக்கிறது. அதனால்தான் சாத்ரே 'மனித சுதந்திரம் மனித சாரத்திற்கு முந்தியது' எனக்குறிப்பிடுகிறார். 'சூழ்நிலை, வாழ்நிலை, ஏற்கனவே தோற்றுவிக்கப்பட்ட நிலை என்பன மனிதனது சுதந்திரத்தை ஒருபோதும் நிர்ணயிக்கவோ, கட்டாயப் படுத்தவோ, துடைத்தெறியவோ முடியாது. காரணம், தனிமனிதன்தான் எல்லாச் சமயங்களிலும் செயலுக்கான பாதையைத் தேர்வு செய்பவனும், அதற்கு முன்பு சூழ்நிலைக்குரிய அர்த்தத்தை தேர்வு செய்பவனுமாவான்' (ராஜதுரை, 1983 :233). இவ்வாறு இருத்தலியலாளரான சாத்ரே மனித வாழ்வின் மையமாக சுதந்திரத்தை விளக்குகிறார்.

### ஃபூக்கோவும் மனித சுதந்திரமும்

மெய்யியல் உலகில் கேள்வி கேட்க முடியாதளவில் கருத்தியல் செல்வாக்குப் பெற்றிருந்த ஜீன் பவுல் சாத்ரேயினை நிர்மூலமாக்கியவராக மிஷல் ஃபூக்கோ கருதப்படுகின்றார். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முக்கியமான சிந்தனையாளராக மதிக்கப்படும் இவரது கருத்தியல்களும் சொல்லாடல்களும் அதுவரையான சிந்தனைப் போக்கின் தளத்தை புரட்டிப் போட்டவைகளாகும். பைத்தியம் மற்றும் நாகரிகம் (Madness and Civilization), சிகிட்சை நிலையங்களின் பிறப்பு (The Birth of Clinic), பொருட்களின் ஒழுங்கு வரிசை (The order of Things), ஒழுங்கும் தண்டனையும் : சிறைச் சாலைகளின் பிறப்பு (Discipline and punish : The birth of Prison) பாலுறவு வரலாறு (The history of Sexuality) போன்றன அவரது புகழ்பெற்ற புத்தகங்களாகும்.

ஃபூக்கோவின் மொத்த எழுத்துக்களும் உரையாடல் (Discourse) எனும் விடயத்தை முன்வைப்பவை. எமது சிந்தனை, அடையாளம் எல்லாமே அதிகாரத்தின் உரையாடலால் கட்டமைக்கப்பட்டவை என்கிறார் ஃபூக்கோ. அவ் அதிகாரம் எப்பொழுதும் ஒரு முறைமைப் படுத்தலுக்குள் உட்படுத்துகின்றது. மேலும் எமது அறிவு ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் கட்டமைக்கப் பட்டவை. அக்கட்டமைப்புக்கு மாற்றமான சிந்தனைகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. இவ்வாறானதொரு கட்டமைப்பு எவ்வாறு மொழியியல், உயிரியல்,

பொருளாதாரம் போன்ற அறிவியல்களில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அவர் ஆய்வு செய்கின்றார். (சுரேஷ், 2007 : 17 – 19)

அதிகாரம் உருவாக்கப்படுவதற்கு பின்னாலுள்ள நுண்ணரசியல் பற்றி ஃபூக்கோ பேசுகிறார். அதாவது மனிதன் கட்டமைக்கப்பட்டவைகளுக்குள் அகப்பட்டுக் கிடக்கிறான். அவனைச்சுற்றி எல்லாமே ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவை. அதன்படி செயற்பட வேண்டிய கட்டாயம் அவனுக்கு உண்டு. சமூகம், வரலாறு, மதம் என்பவற்றால் உருவாக்கப்பட்ட கருத்தியல் களால் மனிதன் ஆட்பட்டிருக்கிறான். அவை ஒவ்வொரு கால கட்டத்திற்குமான உரையாடல்களாக வடிவம் பெற்று மனிதன்மீது அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறது. இதன் மூலம் காலத்திற்குக் காலம் வெவ்வேறு கருத்தியல்கள் அவனை ஆள்கிறது என்கிறார்.

எனவே அறிவு உருவாக்கும் கருத்தியல்கள் ஏற்றத்தாழ்வான சமூக அமைப்பினை தக்கவைத்துக் கொள்ளவும் அதற்குள் மனிதனை உட்புகுத்தி வைத்திருக்கவுமான அனைத்துச் சாத்தியங்களையும் உருவாக்கியுள்ளது. நனவுநிலையில் தான் சுதந்திரமாக இருக்கிறேன் என மனிதன் எண்ணுவது வெறும் மாயையானது. அவனது தெரிவு, விருப்பம், தேவை என அனைத்தும் ஏற்கனவே ஒழுங்கமைக்கப் பட்ட அமைப்பிலேயே காணப்படுகின்றன. தீர்மானிக்கப்பட்ட ஒழுங்கு படுத்தல்களுக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் மனிதனை சுதந்திரம் என்ற கருத்தாக்கம் காப்பாற்றப்போவதில்லை.

ஃபூக்கோவின் படி அதிகாரம் உருவாக்கும் உரையாடல்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டாயத்துடனேயே அமைகிறது. அக்கட்டாயம் மறுக்கப்படும் போது அல்லது ஏற்றுக்கொள்ளப்படாத போது அதற்கான தண்டனை முறைகள் மற்றும் சமூக ஒதுக்குதல் நோக்கி கவனம் செலுத்துகின்றது. அது ஏனையவர்களுக்கு (மற்றமைகளுக்கு) அச்சுறுத்தலாக அமைந்து விடுகிறது. அதன் மூலம் எல்லோரையும் ஒரு குறிப்பிட்ட ஏற்றுக் கொள்ளல் வட்டத்திற்குள்ளேயே வைத்துக்கொள்ள விரும்புகிறது என்கிறார். எனவே இங்கு தப்பித்தலுக்கான வழி என்று எதுவுமில்லை.

இயற்கையாக ஏற்றத்தாழ்வுகளோ, ஏற்றுக் கொள்ளல் அல்லது விலக்குதலோ அமைந்து விடுவதில்லை. கட்டமைக்கப் பட்டதை முழுமுதல் உண்மையாகக் கொண்டு கற்பிக்கப்படுவதே நிகழ்கிறது. இவை உருவாக்கும் பிரத்தியேகமான கற்பிதங்கள் ஒரு நியாயப்படுத்தலை முன்வைக்கிறது. இந்நியாயங்களின் வழிநின்று நோக்கும் போது பொதுமைப்படுத்தப்பட்ட அறிவினையே நிலையான உண்மை எனக் கொள்ளும் நிலை தோன்றுகிறது. இது எந்தத் தவறையும் எமக்கு காட்டுவதில்லை. இதனூடே மிக நுட்பமாக படிந்திருக்கும் அதிகாரம் அது உருவாக்கி வைத்திருக்கும் சொல்லாடல்களில் எம்மை பொருத்தி விடுகிறது. இத்தகைய பொருந்துதலை எவ்வாறு சுதந்திரமாகக் கொள்ள முடியும்? என்பதே ஃபூக்கோவின் கேள்வியாகும்.

இத்தகைய ரீதியில் மனிதன் அதிகாரத்திற்குள் கட்டுப் பட்டவனேயன்றி சுதந்திரமானவனல்ல என்கிறார் ∴பூக்கோ.

## பகுப்பாய்வும் முடிவுகளும்

இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த இருவேறு சிந்தனையாளர்களின் மனித சுதந்திரம் பற்றிய கருத்தாக்கங்களை நோக்கினோம். மனித சுதந்திரத்தை வரையறையற்ற ரீதியில் சாத்ரேயின் விளக்கங்களினூடாக அறிகின்ற அதேவேளை மனிதன் சுதந்திரத்திலன்றி அதிகாரத்தினால் கட்டுப்பட்டவன் என்ற ∴பூக்கோவின் கருத்துக்களும் கவனம் கொள்ளத்தக்கவை.

மெய்யியலில் மனிதன் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் பிற்பாடு மனித இருப்பு பற்றிய பிரச்சினை பிரதான இடத்தினைப் பெற்றது. புறவய அடிப்படையில் மனிதன் பற்றிய பிரச்சினையை ஆராய்வது சாத்தியமற்றது என்பதைப்பேசிய கொள்கையான இருத்தலியம் மனித சுதந்திரத்தை பிரதானமாக வலியுறுத்தியது. அவ்வகையில் சாத்ரேயின் சுதந்திரம் பற்றிய கருத்தியல் மனிதன் தனக்குள்ளேயே தன்னைக் கண்டு கொள்கிறான் என்று அறிவித்தது. 'அர்த்தத்திற்கு முன்னரே இருத்தல் தோன்றிவிட்டது' என்ற சாத்ரேயின் கருத்தை நிராகரித்த ∴பூக்கோ 'மனிதர்கள் ஒருபோதும் சுதந்திரமானவர்களாக இருக்க முடியாது, அவர்கள் அதிகாரத்தின் உரையாடலால் கட்டுப்படுத்தப்பட்டவர்கள், அவ்வதிகாரம் தொடர்ந்து அவர்களை ஒரு முறைமைக்குள் ஆட்படுத்திக்கொண்டே வந்திருக்கிறது' என்றார். இந்த அறிவிப்புக்குப் பின்னர் ஜீன் பவுல் சாத்ரேயின் கருத்தியல் காலாவதித் தன்மையைப் பெறுகிறது.

அதாவது ∴பூக்கோ பேசும் அதிகாரத்தினை வெளிப்படையாக ஒரு சக்தி என்றோ, ஒரு கொள்கையாக்கம் என்றோ வரையறுத்துக் கூறிவிட முடியாது. அதனை அவர் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஆக்கிரமிப்புச் செய்யும் உரையாடல் களினால் தெரிந்து கொள்ள முடியும் என்றார். உரையாடல் என்பதும் காலத்துக்குக் காலம் மாற்றமடையக்கூடியது. அதாவது ஒரு விடயத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம் எனில் அதை ஏற்றுக்கொள்வதற்கான அனைத்து விதிமுறைகளும் உட்கிடையாக எமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றி கேள்வி கேட்க முடியாதளவில் அது உருவாக்கப்பட்டும் இருக்கிறது. இதிலிருந்து தான் எதைச்செய்ய வேண்டும் என மனிதனே தீர்மானிக்கிறான் என்ற சாத்ரேயின் கருத்து நிராகரிக்கப்படுகின்றது. அதாவது அவ்வாறு தெரிவு செய்வதற்கான நனவுநிலைகூட அதிகாரத்தின் உரையாடலால் கட்டமைக்கப் பட்டதேயன்றி சுயமானதல்ல. அவ்வாறே அது சுயமாக இருக்கவும் முடியாது. ஏற்கனவே தரப்பட்ட அல்லது பரீட்சயமாக்கப்பட்ட விடயங்களை கையளித்துவிட்டுத்தான் எமது விருப்பங்களும் தேவைகளும் உருவாக்கப் படுகின்றன என்ற ∴பூக்கோவின் கருத்து சுதந்திரமற்ற நிலையையே காட்டுகின்றது.

எனவே வெளிப்படையில் மனிதன் சுதந்திரமுடையவன் போல் தெரிந்தாலும் ஒழுங்கு

படுத்தல்களாலும், வரிசைப் படுத்தல்களாலும் ஏற்றத் தாழ்வுகளாலும் அவன் எதுவென்று அறியமுடியாத அதிகாரத்திற்குள் சிக்கிக் கொண்டுள்ளான். அவனை அதிலிருந்து விடுவிப்பது என்பது சாத்தியமற்றது. ஏனெனில் ஒழுங்கமைப்பு மீறப்படும் போதோ, அல்லது நிராகரிக்கப்படும் போதோ அதற்கான தண்டனை முறைமைகளின் அச்சுறுத்தலுக்கு உட்படும் நிலை ஏற்படுகின்றது. எனவே இங்கு நிகழ்வதெல்லாம் மௌனமாகக் கீழ்படிதல் என்பதுதான். மாறாக, சுதந்திரமாகச் செயற்படுதல் என்பதல்ல.

## முடிவுரை

ஃபூக்கோ அவரது புத்தகங்களில் அதிகாரமானது எவ்வாறு உருவாக்கம் பெறுகின்றது என்பது பற்றியும் அதன் செல்வாக்கு பற்றியும் விரிவான விளக்கம் அளித்துள்ளார். மனிதர்களைக் கண்காணிக்கும் படியாக அறிவானது, சிறந்தது / சிறப்பற்றது, நல்லது / கெட்டது, மேலானது / கீழானது அழகானது / அழகற்றது என்பவை குறித்த அதிகார பூர்வமான கட்டமைப்புக்களைக் கட்டமைத்து இருக்கிறது. இது போன்ற வகைப் படுத்தல்களும் இருமை எதிர்நிலைகளும் தான் சமூக வாழ்வில் அதிகாரம் செயல்படுவதற்கான அடிப்படைகளாக அமைகின்றன.

அதாவது இது சில கருத்துக்களுக்கு மரியாதையையும் சமூக உயர்வையும் தருவதோடு, இன்னும் சில கருத்துக்களை கீழ்படித்தியும் மதிப்பற்ற நிலையிலும் வைத்திருக்கிறது. இத்தகைய ஒழுங்கமைப்பின் பின்னணியிலான அதிகாரம் சமூக ஏற்றத்தாழ்வினைக் கட்டிக்காத்துக் கொண்டிருக்கிறது. இது தனிமனித சுதந்திரத்தை நிராகரிப்பதோடு மனிதனை சிந்தனை மற்றும் செயலாற்றலுக்கான கருத்தியல் அதிகாரக்கரம் ஒன்றினால் செயற்படச் செய்து கொண்டிருக்கிறது. இங்கு மனிதசுதந்திரம் என்பது சாத்தியமற்ற ஒன்று என்பது புலனாகிறது.

## References


Dumm, T.L., (1996), 'Michel Foucault and the Politics of Freedom', London: Sage.

Foucault, M., (1984), 'The Order of Discourse', in M. Shapiro (ed.) Language and Politics, Oxford: Blackwell.

மார்க்ஸ், அ., (1996), 'பின் நவீனத்துவம் : இலக்கியம், அரசியல்', கோவை : விடியல் பதிப்பகம், உப்பிலிப்பாளையம்.

சுரேஷ், எம்.ஜி., (2007), 'பின்நவீனச் சிந்தனையாளர் வரிசை : ஃபூக்கோ', இந்தியா : அடையாளம், புத்தானந்தம்.

முத்து மோகன், ந., (2007), 'மார்க்ஸியக் கட்டுரைகள்', சென்னை: காவ்யா பதிப்பகம், கோடம்பாக்கம்

ராஜதுரை, எஸ்.வி., (2011), 'இருத்தலியமும் மார்க்ஸியமும்', கோவை : விடியல் பதிப்பகம்,

ராஜதுரை, எஸ்,வி., (1983), எக்ஸிஸ்டென்ஸியலிசம்', மெட்ராஸ் : சாதனா ஆர்ட் பிரின்டரஸ்.


(A verson of this paper presented at 8th International Symposium – 2018, South Eastern University of Sri Lanka)